பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்10 திருவள்ளுவர் ஆண்டு2026 ஆடி 07 ஞாயிற்றுக்கிழமை (23-07-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்240

# குடாநாட்டைக் கைப்பற்றுவதற்கு நீண்ட நாட்கள் தேவைப்படுமாம்!

## இராணுவப் பேச்சாளர் பின்னடிப்பு!!

கொழும்பு, ஜூலை 23

✶ யாழ்ப்பாணக் குடாநாட்டையோ, வடமாகாணத்தையோ கைப்பற்றுவது என்பது இலகுவான காரியமல்ல.

—இரண்டு மூன்று நாட்களிலோ அல்லது நான்கு ஐந்து நாட்களிலோ குடாநாட்டை கைப்பற்றுவது என்ற எந்த நம்பிக்கையும் சரியானதல்ல.

—அதற்கு மிக நாட் செல்லும். நிறையப் போராடவும் நேரிடும்.

✶ யாழ்ப்பாணத்தில் நடக்கும் இராணுவ நடவடிக்கையின் போது யாழ். நகரத்தைக் கைப்பற்றுவது குறித்து நாம் எந்த அறிகுறியையும் தெரிவிக்கவில்லை.

✶ "முன்னேறிப் பாய்தல்" நடவடிக்கையின் இரண்டாவது கட்டம் இப்போது திட்டமிடப்பட்டு வருகிறது.

இந்தத் தகவல்களை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத்முனசிங்கா நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இராணுவ நிலைமை குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

"முன்னேறிப் பாய்தல்" நடவடிக்கை மூலம் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் இருந்து

(5 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் பலவீனப்பட்டால் தமிழருக்கு தீர்வு இல்லை

### குமார் பொன்னம்பலம் பேட்டி

கொழும்பு, ஜூலை 23

இராணுவ நடவடிக்கை மூலம் விடுதலைப் புலிகள் பலவீனப்படுத்தப்பட்டால் அதன் பின்னர் அரசியல் ரீதியாகத் தமிழ் மக்களுக்கு எதுவித தீர்வும் கிடைக்கும் என நான் நம்பவில்லை.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் தலைவர் திரு. குமார் பொன்னம்பலம் பி.பி.ஸி. சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

இராணுவத்தினர் யாழ்ப்பாணத்துக்குள் பிரவேசித்தால் அதன் பின்னர் நாட்டில் தமிழர்கள் இருக்க முடியும் என்பது சந்தேகமே.

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்படுவது தமிழர்கள் தோற்கடிக்கப்படுவது போன்றதே.

யாழ் மக்களை மீட்கும் படை என அரச இராணுவத்தை நான் நம்பவில்லை.

யுத்தம் நடைபெறும் வேளையில் யாழ்ப்பாண மக்கள் விடுதலைப் புலிகளையே ஆதரிப்பர். இதுவே கடந்த கால அனுபவம் ஆகும்.

— இவ்வாறு குமார் பொன்னம்பலம் மேலும் தெரிவித்தார். [ஐ-6]

## செல்லக்கிளி நினைவு தினம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

லெப்டினன்ட் செல்லக்கிளி அம்மானின் 12 ஆம் ஆண்டு நினைவு தினம் இன்றாகும்.

இதனை ஒட்டி திருநெல்வேலி தபாற்பெட்டிச் சந்தியில் அமைந்துள்ள செல்லக்கிளி அம்மான் நினைவுத்தூபியில் இன்று காலை 9 மணிக்கு நினைவு வீரவணக்கம் செலுத்தப்படும்.

முற்பகல் 10 மணிக்கு கல்வி

( 5 ஆம் பக்கம் பார்க்க)

## பேராயருடன் வந்த அமெ. பிரஜை தாண்டிக்குளத்தில் கைதானார்!

### தேசிய கிறிஸ்தவமன்ற கட்டடத்தில் பொலிஸ் சோதனை

கொழும்பு, ஜூலை 23

தென்னிந்திய திருச்சபையின் யாழ். பேராயர் கலாநிதி அதி வண சு. ஜெபநேசன் அடிகளாருடன் வடக்கு நோக்கி வந்து கொண்டிருந்த அமெரிக்கப் பிரசையான கெனத்மல்டோன் நேற்று முன்தினம் தாண்டிக்குளத்தில் கைதானார்.

இதனை அடுத்து கொழும்பு பௌத்த லோக மாவத்தையில் அமைந்துள்ள அங்கிலிக்கன் திருச்சபையின் தேசிய கிறிஸ்தவ மன்றக் கட்டடம் பொலீஸாரின் சோதனைக்கு

[5 ஆம் பக்கம் பார்க்க]

## ஜப்பானியர் பாணியில் புலிகள் வான் வழித் தாக்குதல் நடத்தலாம்

### உயர் பாதுகாப்பு வட்டாரங்களில் அச்சம்

கொழும்பு, ஜூலை 23

இரண்டாம் உலகப் போரில் ஜப்பானியர்கள் நடத்தியது போன்ற பாணியில் படையினருக்கு எதிராக விடுதலைப் புலிகள் வான் வழித் தற்கொலைத் தாக்குதலை ஆரம்பிக்கும் சாத்தியத்தை நிராகரிக்க முடியாது என்று உயர் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

"பமிகாஸ்" என்று அழைக்கப்பட்ட ஜப்பானிய வான் வழித் தற்கொலைப் படையினர் நடத்திய தாக்குதல்களில் 40 அமெரிக்க யுத்தக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டதைச் சுட்டிக் காட்டிய அந்த வட்டாரங்கள் —

விரைவில் விடுதலைப் புலிகளும் அதே பாணியில் படையினருக்கு எதிராக வான் வழித் தாக்குதல்களை நடத்த

(5 ஆம் பக்கம் பார்க்க)

## கெனத் பெர்னாண்டோவை பொலீஸார் விசாரித்தனர்

கொழும்பு, ஜூலை 23

அங்கிலிக்கன் திருச்சபையின் தேசிய கிறிஸ்தவ மன்ற அலுவலகம் பொலீஸாரால் சோதனையிடப்பட்ட சமயம் ஆயர் அதி. வண. கெனத் பெர்னாண்டோவும் விசாரிக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் குறித்து நேற்று நடந்த வாராந்த செய்தியாளர் மாநாட்டில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

சமாதானப் பேச்சுக்களில் அரசின் பிரதிநிதியாகச் செயற்பட்ட ஆயர் கெனத் பெர்னாண்டோவை விடுதலைப் புலிகளின் ஆதரவாளராக அரசு கருதுகின்றதா என்று பத்திரிகையாளர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸிடம் கேள்வி

(5 ஆம் பக்கம் பார்க்க)

## ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சை திட்டமிட்டபடி நடைபெறும்

### கல்விப் பணிப்பாளர் கொழும்பு விரைவு

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ். மாவட்டத்தில் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை திட்டமிட்டபடி எதிர்வரும் 31 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளது.

இது பற்றிய செய்தி [illegible] பில் இருந்து நேற்று யாழ். கல்விப் பணிப்பாளர்களுக்குக் கிடைத்தது.

இதனையடுத்து - பரீட்சை [illegible] மதி அட்டைகள் என்பனவற்றை இங்கு எடுத்து வருவ

(5 ஆம் பக்கம் பார்க்க)

## 2 மாணவர் உட்படமூவர் ஷெல் வீச்சில் காயம்!

வல்வெட்டித்துறை, ஜூலை 23

நேற்று பிற்பகல் பலாலி இராணுவ முகாமில் இருந்து தொண்டமானாறு, கெருடாவில், வல்வை போன்ற பகுதிகளை நோக்கி ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதில் ஜி. சீ. ஈ. உயர்தரப்பரீட்சை எடுக்கும் மாணவன் உட்பட மூவர் காயம் அடைந்தனர். சில வீடுகளும் சேதம் அடைந்தன.

திருப்பதி திலீபன் (வயது 18), செல்வநாதன் சண்முகவேல் (வயது 12) முதலித்தம்பி செல்வரட்ணம் (வயது 45) ஆகி

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/ஸ்கந்தவரோதய கல்லூரி

எமது கல்லூரியைச் சார்ந்த சகல ஆசிரியர்களும், ஏனைய உத்தியோகஸ்தர்களும் நாளை திங்கட்கிழமை [24-7-95) காலை 11.00 மணிக்கு உடுவில் கல்வி கோட்ட அலுவலகத்தில் சமுகந் தந்து சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளவும்.

கல்லூரி ஆரம்பிக்கும் திகதி
பின்னர் அறிவிக்கப் படும்

ஆ. கமலநாதன்
அதிபர்

(சி/1939)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1995-08-31 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

பதவி:

பல்கலைக்கழக மருத்துவ அதிகாரி

சம்பள அளவுத்திட்டம்:

ரூபா 7,300-10x250; 10 x 325 - 13,050/- மாதமொன்றிற்கு.

குறிப்பு:

இத்துடன்

அ) நிலுவையிலுள்ள வேலைகளை நிறைவேற்றும் படியாக மேற்குறித்த சம்பளத்தின் 25%இற்கு சமமான தொகை 1995 - 12 - 31 வரை கொடுப்பனவு செய்யப்படும்.

ஆ] 1993 மே 12ஆம் திகதிய 9 / 93 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் மாதாந்த படியாக ரூபா 600/- செலுத்தப்படும்.

வயதெல்லை:

40க்கு மேற்படலாகாது.

தெரிவு நேர்முகப் பரீட்சை மூலம்:

விண்ணப்பப்படிவங்களையும் இதர விவரங்களையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் பிரதிப்பதிவாளர் / தாபனக்கிளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவங்களையும் விவரங்களையும் பெற, விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தின்பதிவாளர்/ நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா பெறுமதியான காசுக்கட்டளை / தபாற்கட்டளையுடன் சுயமுகவரியிட்டு 2/- ரூபா முத்திரை ஒட்டப்பட்ட 23x10 ச.மீ அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

மேற்படி விண்ணப்பப் படிவங்களையும் இதர விவரங்களையும், கொழும்பு 13, ஆட்டிப்பட்டித் தெரு, 154ஆம் இலக்கத்திலுள்ள யாழ்ப்பாணக் கூட்டுறவுக் களஞ்சியத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளில் விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படும். ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் கவனிக்கப்படும். அரசாங்க/ கூட்டுத்தாபன சேவையிலுள்ளவர்களுக்கும் ஒப்பந்த அடிப்படையில் நியமனம்வழங்குபவர்களுக்கும் வயதுக் கட்டுபாடு கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

-பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
1995-07-06

(சி/1931)

## 12 ம் ஆண்டு நினைவில்



வீரப்பிறப்பு 23 — 06 — 1953

வீரமரணம் 23 — 07 — 1983

விடுதலைப் புலிகளின் கெரில்லாத் தலைவன்

### லெப். செல்லக்கிளி அம்மான்

''இலட்சிய வேங்கைகள் இறப்பதுமில்லை
விடுதலைப் புலிகள் வீழ்வதுமில்லை''

— பழைய மாணவர் சங்கம்
யா/செங்குந்த இந்துக் கல்லூரி

[37678]

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 23

94-95 ஆம் கல்வி ஆண்டுக்கு பேராதனைப் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள சகல பீட மாணவர்களுக்குமான முக்கிய கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சகல மாணவர்களையும் தமக்குரிய பல்கலைக் கழக இலக்கங்களுடன் (Referenec number) அதில் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

(ஐ)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூலை. 23

வலிகாமம் கோட்டத்துக்கு உட்பட்ட அனைத்து அரச, கூட்டுறவு, கூட்டுத்தாபன ஊழியர் சங்க நிர்வாகிகள், நலன்புரிச் சங்கங்களின் நிர்வாகிகள், வணிகர் கழகங்கள், வணிக ஊழியர் சங்கம்—

போக்குவரத்து ஊழியர் சங்கம், சிகை அலங்கரிப்பாளர் சங்கம், வகுப்புத் தொழிலாளர் சங்கம், நகைத்தொழிலாளர் சங்கம் போன்ற தொழில்துறை சார்ந்த அமைப்புகளின் நிர்வாகிகளுக்கும் —

விளையாட்டுக் கழகங்களின் நிர்வாகிகள் ஆகியோருக்குமான விசேட கலந்துரையாடல் இன்று ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு கோண்டாவிலில் உள்ள யாழ். மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

[ஐ]

★ ★ ★

உடுவில் வட்டத்திற்குட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கம், மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம், மகளிர் மன்றம், சனசமூக நிலையங்கள் ஆகியவற்றுக்கான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக் கிழமை பி.பகல் 2.00 மணிக்கு இராமநாதன் கல்லூரிமண்டபத்தில் நடைபெறும் என யாழ். மாவட்ட அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

[ஓ]

## இடம் பெயர்ந்தோர் நிவாரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

''முன்னேறிப் பாய்தல்'' இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்து நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் அகதி முகாம்களில் தங்கியிருந்தோரினதும்—

நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தங்கியிருந்தோரினதும் உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளது.

இவர்கள் தமது நிரந்தர பிரதேச செயலர் பிரிவில் இந்த நிவாரணத்தைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

[இ]

## அறிவித்தல்

சுன்னாகம்
அந்தோனியார்
கோயிலடியைச் சேர்ந்த

வேலாயுதம்
செல்வரத்தினத்தை

அவரது
மனைவியும் மகளும்
தேடிக்கொண்டிருக்கிறார்கள்
தகவல் தெரிந்தவர்கள்

க. கதிர்காமன்
கரணன் வீதி, அச்செழு
என்னும் விலாசத்தில்
தொடர்பு கொள்ளவும்

க. கதிர்காமன்,

## திறந்த பல்கலை பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 23

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ் நிலையத்தில் உயர் தொழில் ஆங்கிலம் - மாதிரி முன்னோடிப் பரீட்சை இன்று ஞாயிறு காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இறுதிப் பரீட்சை எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.


## UNIKCO COMPUTER CENTRE

★ வகுப்புகள் யாவும் வழமைபோல் நடைபெறுகின்றன.
★ புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
★ நல்ல நிலையில் Nonochrome ஒன்றும், XT Key-board ஒன்றும் விற்பனைக்குண்டு.
★ நல்ல நிலையில் Hard Disk வைத்திருப்பவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

மேலதிக விவரங்களுக்கு:

37. மனிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

60 விதானையார் வீதி,
சுண்டிக்குளி.

(சி-1938]


## கண்ணீர் அஞ்சலி

பொற்பதி ஐ. வி. கழகத்தைச் சேர்ந்த திரு. J. மோகன், திரு. J. பாஸ்கரன் ஆகியோரின் அன்புத் தாயார்

### திருமதி சுப்புலட்சுமி ஜெகநாதன்

அவர்களின்

மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

பொற்பதி ஐ. வி. க.
கொக்குவில்.

[37682]

## மரண அறிவித்தல்கள்

### திருமதி லலிதாதேவி சிவசுப்பிரமணியம் (வனிதா)

(உப தபால் அதிபர் - காரம்பன் தற்போது யாழ். தபாலகம்)

திருமதி லலிதாதேவி (வனிதா) சிவசுப்பிரமணியம் நேற்றுச் சிவபதமடைந்துவிட்டார்.

இவர் கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த சோமசுந்தரம் சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், சுரேந்தனின் (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை) அருமைத் தாயாரும், முன்னாள் நாரந்தனைக் கிராம சபைத் தலைவரும், இணக்க சபைத் தலைவரும், சமாதான நீதிவானுமாகிய சுப்பையா கதிரித்தம்பி - செல்லம்மா தம்பதிகளின் புதல்வியும், ஜெயானந்தனின் (அதிபர் இ. த. க பாடசாலை திருநெல்வேலி) சகோதரியும், கோண்டாவில் மேற்கு காலஞ்சென்ற சோமசுந்தரம், அன்னம்மா தம்பதிகளின் இளைய மருமகளும், ஜெயானந்தன், பராசக்தி (யாழ் தொழில் நுட்பக் கல்லூரி), பஞ்சநாதன் (ஹரிபாங்க் - கொழும்பு), திருமதி பரமலிங்கம் சரோஜினி ஆகியோரின் மைத்துனியும், முரளிதரன், லக்சால் ஆகியோரின் சித்தியும், நிராளினி, பரணீதரன், ரிபநீதன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23-7-95) காலை 9 மணிக்கு இல. 16/5, சீனியர் லேன் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சு. கதிரித்தம்பி
(தந்தை)

(37679)

### திருமதி தெய்வானைப்பிள்ளை தம்பையா

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், பன்னாலை, உடுவில் கிழக்கை வசிப்பிடமாகவும், தற்பொழுது இடம்பெயர்ந்து மட்டுவிலை இருப்பிடமாகக் கொண்டவருமாகிய திருமதி தெய்வானைப்பிள்ளை தம்பையா நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் தம்பையாவின் அன்பு மனைவியும், இலங்கைநாயகம், உலகநாயகி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற இராமநாதனின் மாமியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை [23 - 7 - 95] முற்பகல் 10 மணியளவில் மட்டுவில் இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தகவல்:
இ. ஜெயச்சந்திரன் (செந்தி)
[பேரன்]

S. பொன்னுத்துரை,
சிவன் கோவிலடி,
மட்டுவில்.

[37684]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டு. நகரில் திடீரென பல சோதனை நிலையங்கள்

கொழும்பு, ஜூலை 23

மட்டக்களப்பு நகரின் நுழை வாயில்களில் இராணுவ மற்றும் இராணுவ பொலிஸ் சோதனை நிலையங்கள் பல திடீரென அமைக்கப்பட்டுள்ளன.

இச் சோதனை நிலையங்களில் வைத்து நகரினுள் நுழைய முயலும் சகல வாகனங்களும், பொதுமக்களும், அவர்களுடைய உடைமைகளும் கடும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

[illegible]க்கிய இடங்களில் பெண்களை, பெண் இராணுவத்தினர் [illegible]சாதித்து வருகின்றனர் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

மட்டக்களப்பு நகருக்கு வெளியேயுள்ள பல பிரதேசங்களில் இருந்த படைமுகாம்களை கடந்த வாரத்தில் அரச படைகள் மூடிக்கொண்டதை அடுத்து அப்பிரதேசங்கள் புலிகளின் முழுக் கட்டுப்பாட்டுக்குள் வந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (உ-எ)

# இடம்பெயர்ந்தோரினால் குடாநாட்டில் உணவுத்தட்டுப்பாடு ஏற்படும் ஆபத்து

## 75 சதவிதமானோரே இதுவரை திரும்பினர்

யாழ்ப்பாணம், ஜூலை 23

''முன்னேறிப் பாய்தல்'' ராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்த மக்களுக்கு தொடர்ந்தும் நிவாரணம் வழங்க வேண்டி ஏற்பட்டால், குடாநாட்டில் பெரும் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இடம் பெயர்ந்த மக்களுள் 75சதவீதமானோர் மட்டுமே இதுவரை தத்தமது பிரதேசங்களுக்குத் திரும்பியுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானோர் தமது உடைமைகளை பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பிவிட்டு, தாம்மட்டுமே தங்கியுள்ளனர்.

இவர்கள் மற்றொரு இராணுவ நடவடிக்கை இடம் பெற்றால் விரைவில் வெளியேறத் தக்கவாறு தம்மை தயார் நிலையில் வைத்துள்ளனர்.

ஏனைய 25 சத வீதத்தினரின் இருப்பிடங்கள், மீண்டும் அவர்கள் வசிக்கக்கூடிய நிலையில் இல்லை.

இதன் காரணமாகவும், அச்சம் காரணமாகவும் அவர்கள் இன்னமும் தமது இடங்களுக்குத் திரும்பவில்லை.

யாழ். மாவட்டத்திற்குத் தற்போது கப்பல் மூலம் எடுத்து வரப்படும் உணவுப் பொருள்கள் இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்கவும், இங்குள்ள ஏனைய மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யவும் மட்டுமே போதுமானதாக உள்ளது.

மேலதிகமாக உணவுப் பொருள்கள் அனுப்பப்படாத நிலையில், தொடர்ந்தும் இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணத்தை வழங்குவது என்பது இயலாத விடயம்.

அதேசமயம் தற்போது பருத்தித்துறையில் கப்பல்கள் பொருள்களை இறக்க 40 நாள்களுக்கு மேல் எடுக்கிறது.

பொருள்களை இறக்குவதற்கு ஏற்ற வசதிகள் அங்கு இல்லாமையே இதற்குரிய காரணம் என்று சொல்லப்படுகிறது. (இ-எ-4-13)

# யாழ். உணவுத் தட்டுப்பாடு குறித்து அரச அதிபர் எமக்கு அறிவிக்கவில்லை

## புனர்வாழ்வு அதிகாரி கொழும்பில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை, 23

யாழ். மாவட்டத்தில் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக யாழ். அரச அதிபரிடம் இருந்து அறிவிப்பு எதுவும் வரவில்லை என்றும்—

வடபகுதிக்கு வழமையான உணவு விநியோகத்தை நாம் மேற் கொண்டு வருகிறோம் எனவும் புனர்வாழ்வு ஆணையாளர் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் கொழும்பில் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதால் அங்கு பொருள்களின் விலை அதிகரித்துள்ளதாகக் கூறப்படுவது பற்றிக் கேட்ட போதே அவர் முன்கண்டவாறு கூறினார் என்று அரசு சார்புப்பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ)

## கருத்தரங்கு

வட மராட்சி, ஜூலை 23

பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலைய நிர்வாகிகளுக்கான போர்க்காலக் கருத்தரங்கு ஒன்று இன்று 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை புலோலியில் உள்ள பருத்தித்துறை பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெறும். (க-173)

## கைது

கொழும்பு, ஜூலை 23

கண்டியில் நடைபெற்ற ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சை கருத்தரங்கிற்கு சமுகமளித்து விட்டு திருப்பி வந்துகொண்டிருந்த தமிழ் மாணவர்கள், பதுளையில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். [எ]

## ஷெல் வீச்சில் படுகாயமுற்ற பெண் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

''முன்னேறிப் பாய்தல்'' ராணுவ நடவடிக்கையின் போது குடிமனைகளை நோக்கி ஏவப்பட்ட ஷெல் தாக்குதலில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பெண் ஒருவர் நேற்று அதிகாலைமரணமானார்.

'புலிகளின்குரல்' வானொலி பணியாளரான தியாகராஜா பிருந்தா (25 வயது) என்பவரே இவ்வாறு மரணமானவர் ஆவார்.

கடந்த 10 ஆம் திகதி ஆனைக்கோட்டையில் நடந்த இந்தச் சம்பவத்தில் இவரது தந்தையாரும் உயிரிழந்துவிட்டது குறிப்பிடத்தக்கது. (ஒ-எ-15)

## கோயில் சேதம்

வட்டுக்கோட்டை, ஜூலை23

கடந்த 9 ஆம் திகதி நடைபெற்ற புக்காரா குண்டு வீச்சுத் தாக்குதலில் கொட்டைக்காடு சிவன் கோயிலின் வசந்த மண்டபம் பலத்த சேதத்துக்குள்ளாகியது. கோயிலின் [illegible] நொறுங்கியுள்ளது. (க)

# ஷெல் வீச்சுக்கு இலக்காகி செஞ். அலுவலகமும் சேதம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

''முன்னேறிப் பாய்தல்'' ராணுவ நடவடிக்கையின் போது செஞ்சிலுவைச் சங்கமும் தாக்குதலுக்கு இலக்காகியது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மல்லாகத்தில் அமைந்துள்ள வலிவடக்குப் பிரிவு செயலகத்தில் ஷெல் ஒன்று விழுந்து வெடித்துள்ளது.

இதனால் செயலகத்தின் தளபாடங்கள் பல சேதமாக்கப்பட்டுள்ளன. செயலகத்தில் இருந்த மருந்துப் பொருள்களும் உணவு வகைகளும் வீசி எறியப்பட்டிருந்தன. [க-எ-4]

# அரச படைக்கு உதவ தேசிய துணைப்படை!

கொழும்பு, ஜூலை 23

போரில் ஈடுபட்டுள்ள படையினருக்கு உதவியாக தேசிய துணைப்படை ஒன்றை ஜனாதிபதி சந்திரிகாபண்டாரநாயக்க ஆரம்பித்துள்ளார்.

ஆரம்பத்தில் 20 பேருடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்படை விஸ்தரிக்கப்பட்டு ஆயிரக் கணக்கில் படையினர் சேர்க்கப்படுவர் என்று பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்ததாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

இந்தப் படைப் பிரிவில் முதலில் பயிற்சி பெற்று வெளியேறியவர்களை ஜனாதிபதி கடந்த வியாழனன்று உத்தியோகபூர்வமாக படையில் சேர்த்துக் கொண்டார்.

### களுத்துறை சூட்டுச் சம்பவம்:

# பொலீஸாரைச் சாடி அமைச்சர் அறிக்கை

பொலீஸார் தேவையற்ற விதத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தியதிலேயே மூவர் உயிரிழந்தனர்.

களுத்துறை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் குறித்து அரசின் சார்பில் விசேட அறிக்கை ஒன்றை வெளியிடுகையில் அமைச்சர் ரிச்சாட் பத்திரான இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 17 ஆம் திகதி சிங்கள — முஸ்லிம் அணிகளுக்கு இடையில் நடைபெற்ற கிரிக்கெட் ஆட்டம் ஒன்றை அடுத்து அங்கு பதற்றம் ஏற்பட்டதும் —

அங்கு கலீல் நாளில் பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மூவர் உயிரிழந்ததும் தெரிந்தவையே.

இரு குழுக்களுக்கிடையே இடம் பெற்ற மோதல் குறித்து விசாரணை மேற்கொள்ளச் சென்ற களுத்துறை தெற்குப் பொலீஸார் தேவையற்ற விதத்தில் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததனால் மூவர் பலியானார்கள் எனவும் —

அங்கு சென்ற பல பொலீஸார் சிவில் உடையில் இருந்ததாகவும் —

சூழ்நிலைக்குச் சற்றும் பொருத்தமற்ற விதத்தில் அவர்கள் நடந்து கொண்டார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-10)

# 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 20 — 06 — 1969

மறைவு: 23 — 07 — 1989

செல்வன்

**மகாலிங்கம் மகேஸ்வரன்**

பரிவுடன் பாசத்துடன் வளர்ந்த பெற்றோர் உடன் பிறந்தோரைப் பரிதவிக்க விட்டு விட்டு கொடிய காலன் அகாலமாய் உன் உயிரைக் குடிக்க இனி உன் வரவை எப்போது நாம் காண்போம்? ஏங்குகின்றோம் தவித்தே......

அன்னாரின் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, தங்கை, தம்பி.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(37619)

# 5-ம் ஆண்டு நினைவஞ்சலி

அப்பா! பரமசிவம்



ஆண்டவன் படைப்பு: 13 — (6 — 1938

அரக்கர் பறிப்பு: 16 — 08 — 1990

அமரர்

**கார்த்திகேசு திருஞானசம்பந்தர்**

(நயினாதீவு)

(ஓய்வு பெற்ற நில அளவையாளரும்,
யா/ தொழில் நுட்பக்கல்லூரி பகுதி நேரவிரிவுரையாளரும்)

திதி: 23 – 07 – 1995

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் தவிக்கும்;
மனைவி, பிள்ளைகள்.

621, பருத்தித்துறை வீதி,
முத்திரைச் சந்தி,
நல்லூர்.

(37630)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வாய்வுக் குழப்பமா? பசி இன்மையா? அருந்துங்கள் "ஜீவா" உடன் இரசம் (Jeeva Instatan Rasam) மூவர் அருந்தக் கூடிய பக்கட் ரூபா 5/- முத்தையா நிறுவனம், கச்சேரியடி, யாழ்ப்பாணம். (காட்டுக் கந்தோர் ஒழுங்கை முன்னால்) (37648)

J. C. இன பசு மாடு ஒன்று உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மு. கமலநாதன் 21/2, விதானையார் வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம். (37668)

### தேவை

வெற்று ஜாம் (Jam) போத்தல்கள், பிளாஸ்டிக் மூடியுடன் கூடிய வீவா, ஹார்லிக்ஸ் போத்தல்கள் எம்மால் கொள்வனவு செய்யப்படுகிறது. ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ், (தனி) லிமிட்டெட், 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி-1903)

### உடன் தேவை

இடம் பெயர்ந்த பிள்ளையற்ற தம்பதிக்கு தனியாகவோ அல்லது பகுதியாகவோ இருப்பிட வசதி வாடகைக்கு உடன் தேவை. நல்லூர் மானிப்பாய் பிரதேச சபை விரும்பத்தக்கது. 815 மே/பா, உதயன். [37662)

### வாடகைக்குத் தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட உள்ள திருமண சேவை ஸ்தாபனத்திற்கு வீட்டில் ஒரு அறையோ அல்லது தனியான சிறிய கட்டடமோ உடன் வாடகைக்குத் தேவை. தளபாட வசதியிருந்தால் நல்லது, 814, மே/பா உதயன். [37661]

### இறைச்சிகோழி விற்பனை

Broiler இறைச்சிக்கோழிகள் தினமும் காலை 7-00 தொடக்கம் சுத்தம்செய்து பெற்றுக்கொள்ளலாம். எங்கள் ஸ்தாபனத்திற்கு முகப்பில் இருக்கும் விற்பனை நிலையம் எங்களுடையதல்ல. உங்கள் வசதிக்காக எங்கள் வாசலில் Nallur Video Centre பெயர்ப்பலகை உண்டு. இல. 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (37621)

### ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆண்டு 8, 9, 10, 11 வரைக்கும் வீட்டில் வந்து ஆங்கிலம் கற்பித்துக் கொடுக்கப்படும். பாடத்தில் குறைவானவர்களுக்கு அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படும். இல. 813, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (37601)

### விசேஷ அன்ரனா

ரூபவாஹினி, மட்றாஸ் நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு விசேஷ T. V. அன்ரனா பொருத்துதல், பழுதுபார்த்தல் T. V. செட், றேடியோ, மணிக்கூடுகளை திருத்திக் கொள்வதற்கு வீனஸ் டிக்காவாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, பிரான்லி வீதி [ஆரியகுளம் சந்தி], யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-1687]

### காணவில்லை

சாவி த 2-3376 இலக்க சிவப்பு-வெள்ளை மோட்டார் சைக்கிள் 11-07-95இல் சண்டிலிப்பாய் வடக்கில் இருந்து காணாமல் போய்விட்டது. தகவல் தெரிந்தவர்கள் தயவு செய்து தொடர்புகொள்ளவும். டாக்டர் வி. எஸ். நடராஜா, மே/பா கே. சிவபாதசுந்தரம், வன்னியசிங்கம் லேன், தாவடி வடக்கு, கொக்குவில். சன்மானம் வழங்கப்படும். [37652)

### திருமண சேவை

செவ்வாய் குற்றமற்ற பாவம் கூடிய ஆண் பட்டதாரி ஆசிரியர்கள் எம்மிடம் உண்டு. தொடர்பு: இ. பாஸ்கரன், இல. 41, பிரப்பங்குளம் வீதி, வண்ணார் பண்ணை. (37654)

### மணப்பெண்கள் தேவை

குற்றமுள்ள 35 வயது M. B. Bs,க்கும், 30 வயது கூட்டுறவு மனேஜருக்கும், 33 வயது எலெக்ரிக்கல் எஞ்ஜினியருக்கும், கத்தோலிக்க 30 வயது இந்தோனேசிய மணமகனுக்கும் தேவை. தொடர்பு: மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (37663]

### விநாயக திருமண சேவை

32 வயது, 30 வயது பட்டதாரி ஆசிரியர்களுக்கும், 37 வயது கிராமஅலுவலர்களுக்கும், வெளிநாட்டிலிருந்து விவாகம் செய்ய வந்திருக்கும் இருவருக்கும் இரண்டு (Trained ஆசிரியர்களுக்கும் மணப் பெண்கள் தேவை. விவரங்களுக்கு நேரில் கடித மூலம் தொடரவும் சுவாமியார் இராசகுலசிங்கம், 53/5, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம். (37653)

## பயிற்சிப் பத்திரிகையாளர்

பத்திரிகைத் துறையையே தொழிலாகக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வமும் ஆசையும் உள்ளவர்களில் நீங்களும் ஒருவரா?

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர் தரப் பரீட்சையில், நான்கு பாடங்களில் சித்தி அடைந்த கல்வித் தகைமையும் உங்களுக்கு உண்டா?

அவ்வாறாயின் உதயன் ஆசிரியர் குழுவில் பத்திரிகையாளராகப் பயிற்சி பெற்று, பின்னர் பணிபுரிவதற்கு நாம் தேடுவோரில் நீங்களும் ஒருவராகும் வாய்ப்பு உங்களுக்கு உண்டு.

கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சையில் தமிழிலும், ஆங்கிலத்திலும் ஆகக் குறைந்தது திறமைச் சித்தி பெற்றிருப்பது அவசியம்.

வயதெல்லை: 20 முதல் 24 வரை

பூரண விவரங்களுடன் 29 - 07 - 95 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

ஆளணி முகாமையாளர்,
உதயன் வெளியீட்டகம்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## அறிவித்தல்

யுனிரெக் பொறியியல் நிறுவனத்தில் கடமைபுரியும் சகல தொழிலாளரையும் 24 - 07 - 1995 திங்கட்கிழமை உடனடியாக வேலைக்குச் சமுகமளிக்கும் படி கேட்டுக் கொள்கிறோம்.

முகாமையாளர்,
யுனிரெக் பொறியியல் நிறுவனம்,
வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.

[சி-1937]

## வரி செலுத்துவோருக்கான சிறப்புக் கூட்டம்

வரி செலுத்துவோருக்கான சிறப்புக் கூட்டங்களை நடத்துவதற்கு வருவாய்ப் பகுதி ஏற்பாடுகள் செய்துள்ளது. பின்வரும் அட்டவணையின்படி நடைபெற உள்ள இச் சிறப்புக் கூட்டங்களுக்கு அவ்வப்பகுதிகளைச் சேர்ந்த வரிக்குட்பட்ட வாணிப உரிமையாளர்களை தத்தமது வரி ஆவணத்துடன் குறித்த நேரத்திற்கு தவறாது வருகை தருமாறு வருவாய்ப் பகுதிப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

| வரிசெலுத்தும் பிரிவு | நாள் / நேரம் | இடம் |
|---|---|---|
| வலிகாமம்; யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் உ. அ. அ. பிரிவுகள் | 23-07-95 (ஞாயிறு) மு. ப. 10. 30மணி | குமாரசாமி மண்டபம் யாழ். இந்துக் கல்லூரி |
| தென்மராட்சி: தென்மராட்சி, பச்சிலைப் பள்ளி உ. அ. அ. பிரிவுகள் | 23-07-95 [ஞாயிறு] பி. ப. 8. 00-மணி | றிபேக் கல்லூரி சாவகச்சேரி |
| வடமராட்சி: கரவெட்டி, பருத்தித் துறை, வடமராட்சி கிழக்கு உ. அ. அ. பிரிவுகள் | 24-07-95 [திங்கள்] பி. ப. 3. 00மணி | மத்திய கல்லூரி நெல்லியடி |

## விரிவுரைகள் ஆரம்பமாகும்

கோப்பாய் ஆசிரியப் பயிற்சிக்கலாசாலையில் விரிவுரைகள் 24 - 07 - 1995 திங்கட்கிழமை ஆரம்பமாகுமென்பதை அதிபர் அறியத் தருகிறார்.

திருமதி சி. இராமநாதன்
அதிபர்
கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலை
கோப்பாய்.

[சி-1936]

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 07 — 06 — 1940

மறைவு: 23 — 07 — 1985

திருமதி
லூர்ட்ஸ் மாக்கிறெட் றோஸ் தேவதாஸ்
(சறோஜினி)

ஆண்டுகள் பத்தும் ஓடோடி மறைந்தன
அம்மா உன் நினைவுகள் என்றென்றும் மாறாது
இன்றும் எம் கண்முன்னே ஒளியூட்டும் தீபமாய்
நின்றெம்மைப் பார்க்கின்றாய் உம்மை நாம் –
மறப்போமோ

எங்களைத் தவிக்க விட்டுத் தாயே நீ –
சென்ற தெங்கே
என்று நீ திரும்பி வந்து எம்முடனே தங்கிடுவாய்
சென்ற நீ வரமாட்டாய் என்றெமக்குத் தெரியுமம்மா
அன்பான அப்பாவுடன் அழுது கொண்டே –
இருக்கிறோம்.

அன்புக் கணவர், பிள்ளைகள்,
சகோதரர், உறவினர்கள்.

466/2 B, புனிதயுவானியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். [37660]

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி



காரைநகர் புதுறோட்
அமரர் முத்தையா இராசையா
மறைவு: 23 – 07 – 1988

ஆசை ஐயாவே! அன்புத் தெய்வமே! மெய் வருந்தி எங்கள் மேன்மைக்காய் உழைத்தீர்கள். செய் கருமம் சீராக்கி சிறப்புகள் பெற்றீர்கள். நெஞ்சமெல்லாம் உம் நினைவை நிறைவாக்கிக்கொள்கிறோம்.

29 – 04 – 1974 இல் சிவபதமடைந்த எங்கள் அம்மாவையும் இன்று நினைவு கூருகின்றோம். உங்களின் ஆன்மாவின் பூரண சாந்திக்காக இறைவனை வேண்டி நிற்கும்.

உங்கள் பிரிவு தாங்காது துயருறும்;
மக்கள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

574/1, கிட்டுசாலை,
யாழ்ப்பாணம். [37608]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

## இரண்டில் எது?

[illegible]படையினர் தற்போது ஆரம்பித்துள்ள இராணுவ நடவடிக்கையில் குறைந்த இழப்புடன் முக்கிய வெற்றி கிடைக்கும் — என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, மாநாடு ஒன்றில் பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

அதே வேளை —

விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கை திட்டமிட்டபடி அவர்களைத் தோற்கடிப்பதன் மூலம் பூர்த்தி அடையும் — என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார்.

மருமகனும், மாமனும் தாம் தொடங்கியுள்ள போரில் நிச்சயம் வெற்றி கிடைக்கும் என்ற தொனியில் பேசியிருக்கிறார்கள். அந்தளவுக்கு அவர்களுக்குபெரும் நம்பிக்கை இருக்கிறதா அல்லது சிங்கள மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதற்காகப் பேசுகிறார்களா என்பது அவர்களுக்குத்தான் தெரியும்.

தமிழ் மக்களுக்கு பேரழிவை உண்டாக்கிக் கொண்டு அரச படைகள் ஆறு நாள்களில் ஆக்கிரமித்த பிரதேசத்தை விடுதலைப் புலிகள் இரண்டு நாள்களில் மீட்டு தமது அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொண்டனர்.

இந்த உண்மையை சந்திரிகாவும், அனுருத்தவும். மறைக்க முயன்றாலும்— விழுந்தும் மீசையில் மண்படவில்லை என்று காட்ட முனைந்தாலும் — இவ்விடயம் வெளியே கசிந்து விட்டது. தோல்வியைச் சமாளிப்பதற்காக இராணுவ அதிகாரிகள் போர்த் தந்திரம், புதிய உத்தி, தந்திரோபாயம் என்ற சொற்றொடர்களுக்குள் ஒளிந்துக் கொள்கிறார்கள்.

அதுபோலவே மருமகனும், மாமனும் போரில் வெற்றி தமக்கே என்ற அதீத நம்பிக்கையில் அது தொடர்பாக கட்டுக்கதைகளைக் கூறி வருகிறார்கள்.

விடுதலைப் புலிகளைத் தோற்கடித்ததும் இன்னும்சில தினங்களில் அரசின் அரசியல் தீர்வுத் திட்டம் பகிரங்கப் படுத்தப்படும் என்று அமைச்சர் பீரிஸ் இம் மாதம் 18ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

''முன்னேறிப் பாய்தல்'' தாக்குதலுக்கு எதிரான ''புலிப்பாய்ச்சல்'' தாக்குதல் விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியில் மேலோங்கி நிற்கிறார்கள் என்பதைக் காட்டி விட்டது.

இதன் பின்னரும் —

இந்த உண்மையை மறைத்துக் கொண்டு அரசு போரை நீடிக்கப் போகிறதா அல்லது விடுதலைப் புலிகளின் பலத்தை அங்கீகரித்து அவர்களுடன் இணக்கத்துக்கு வரும் பொருட்டு பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்போகிறதா?

1983 ஜூலை 23 இல் 13 இராணுவத்தினர் கொலை செய்யப்பட்ட போது கரந்தடிப் படையாக இருந்த விடுதலைப் புலிகள் 12 வருடங்களில் எவ்வளவு பலமடைந்துள்ளார்கள் என்பதனை அரசாங்கம் கவனத்தில் எடுக்காமல் இருக்க முடியாது.

அரசு இரண்டாவதைத் தெரிவு செய்தால் இரு பக்கங்களிலும் ஏற்படும் அழிவுகளைத் தவிர்க்கலாம். தீர்வு நோக்கி நடைமுறை ரீதியாக அடி எடுத்து வைக்கத் தொடங்கலாம்!

# கிளாலியில் அதிகரிக்கும் திருட்டுச் சம்பவங்கள்!

## சன நெரிசலை பயன்படுத்தி கைவரிசை

யாழ்ப்பாணம், ஜூலை 23

கிளாலிக் கரையில் இருந்து பஸ்தரிப்பு நிலையம் வரையிலான இரவு நேர டிராக்டர் போக்குவரத்தின் போது சன நெரிசலைப் பயன்படுத்தி திருடர்களின் கைவரிசை தற்போது அதிகரித்து வருவதாக தெரிவிக்கப் படுகிறது.

கிளாலியில் இறங்கி யாழ். வருவதற்கான பஸ்தரிப்பு நிலையத்திற்கு டிராக்டரில் வந்து கொண்டிருந்த பெண் ஒருவரிடமிருந்து 68 ஆயிரம் ரூபா ரொக்கப் பணமும் நகையும் களவாடப்பட்டுள்ளன.

நள்ளிரவு டிராக்டரில் சன நெரிசல் அதிகமாக இருக்கவே நெரிசலோடு நெரிசலாக நபர் ஒருவர் தமது கழுத்தை கையால் நெரித்தார் என்றும் —

நோ தாங்காது கைப்பை வைத்திருந்த கையால் கழுத்தை தாம் பிடிக்கவே கைப்பையிலிருந்த பணமும் நகையும் திருடப் பட்டதாகவும் பணத்தை பறிகொடுத்த கோப்பாய் தெற்கைச் சேர்ந்த திருமதி. சி. மனோறஞ்சிதமலர் தெரிவித்தார்.

பறிகொடுத்த பணம் தமது சொந்தப் பணம் அல்ல என்றும் கொழும்பில் வைத்து உறவினர்களுக்கு வழங்குவதற்காக தெரிந்தவர்களால் வழங்கப்பட்ட பணம் என்றும் அவர் கூறினார்.

இச்சம்பவம் தொடர்பாக பளை காவல்துறை பணிமனையில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் —

கடந்த திங்கட்கிழமை இரவு கிளாலி நோக்கி வந்த படகில் இருந்த திருடப்பட்ட பயணப் பொதி ஒன்றை மறு கரைக்கு கொண்டு வந்த இருவர் பளை காவல் துறையினரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பயணப் பொதி பளை காவல் பணிமனையில் வைக்கப்பட்டுள்ளது.

(இ-117-4)

### செல்லக்கிளி..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யங்காட்டு சந்திக்கு சமீபமாக உள்ள நினைவாலயத்திலும் வீரவணக்க நிகழ்வு இடம் பெறும்.

கடற்புலி லெப்டினன்ட் மகான், லெப்டினன்ட் நற்குணம் (நிரோஜன்), வீரவேங்கை சேகர், 2 ஆம் லெப்டினன்ட் ஞானமூர்த்தி ஆகியோரின் உருவப்படத் திரை நீக்கமும் அங்கு இடம்பெறும்.

இரவு 7.30 மணிக்கு திருநெல்வேலி கிழக்கு வாலையம்மன் சனசமூக நிலைய முன்றிலில் செல்லக்கிளி அம்மானின் நினைவு வீரவணக்கக் கூட்டம் நடைபெறும், விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் அதில் உரையாற்றுவர். (ஐ)

### ஜப்பானியர்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தயங்கமாட்டார்கள் என்று தெரிவித்தன.

உலகில் முக்கிய இடத்தை வகிக்குப் கெரில்லா அமைப்பான விடுதலைப் புலிகள் ஆறு இலகு விமானங்களை வைத்திருப்பதாக நம்பப்படுகிறது என்றும் —

விடுதலைப் புலிகளின் இத்தகைய வான் வழித் தாக்குதல்களைசமாளிப்பது குறித்து அரசு தற்போதே தீவிரமாகப் பரிசீலிக்கத் தொடங்கிவிட்டதாகவும் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ''வெரித்தாஸ்'' வானொலி தெரிவித்தது. [ஐ]

### ஜி. சீ. ஈ. உயர்தர---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தற்காக கல்விவலயம் இரண்டின் பணிப்பாளர் திரு. கே. சுந்தசாமியும், கல்வித் திணைக்களப் பிரதிநிதி ஒருவரும் நேற்று இங்கிருந்து கொழும்பு பயணமாகினர்.

குடாநாட்டில் ஜி. சீ. ஈ உயர் தரப் பரீட்சையைத் திட்டமிட்டபடி நடத்துவது என்ற முடிவு, கடந்த 18 ஆம் திகதி கொழும்பில் கூட்டுப்படைத் தலைமையகத்தில் நடந்த உயர்மட்ட மாநாட்டிலேயே எடுக்கப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் அது குறித்த செய்தி நேற்று முன்தினம் வரை யாழ்ப்பாணத்துக்கு அறிவிக்கப்படவில்லை.

வடக்கில் சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்படாத பகுதிகளில் இந்தப் பரீட்சையை நடத்த முடியாது என்றுகல்வி உயர் கல்வி அமைச்சர் ரிச்சார்ட் பத்திரன நாடாளுமன்றத்தில் தெரிவித்ததை அடுத்து பரீட்சை நடைபெறுமா இல்லையா என்ற குழப்பநிலை ஏற்பட்டிருந்தது தெரிந்ததே.

நேற்றுக் காலை கொழும்பில் இருந்து திரும்பிய யாழ். கல்வித்திணைக்கள பிரதிநிதி ஒருவர் மூலமே பரீட்சை திட்டமிட்டபடி நடைபெறும் என்ற தகவல் இங்கு தெரிய வந்தது.

பரீட்சை வினாத்தாள்கள் மற்றும் காகிதாதிகள் என்பனவற்றை திருமலையில் இருந்து ''ஹபரண'' கப்பலில் எடுத்துவர ஏற்பாடாகியுள்ளது. (ஐ-4)

### கெனத்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

எழுப்பினர்.

அதற்கு அவர் — ''விசாரணைகள் மட்டுமே நடைபெறுகின்றன. வேறு எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை'' என்று பதிலளித்தார்.

#### ரியன்ஸி பெரேரா கவலை தெரிவிப்பு

இதற்கிடையில் அங்கிலிக்கன் திருச்சபையின் தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் அலுவலகம் பொலீஸாரின் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது குறித்து அதன் செயலாளர் வண. பிதா ரியன்ஸி பெரேரா கவலை தெரிவித்துள்ளார்.

இந்நாட்டில் சமாதானம் அமைதி பற்றிப் பேசப்படுவதை எவரும் விரும்பவில்லை என்பதையே இச்சம்பவம் எடுத்துக் காட்டுகிறது என்றும்—

இனங்களுக்கு இடையே சமாதானத்தை ஏற்படுத்த நாம் எடுத்து வரும் முயற்சிகளைத் தடுக்க அரசாங்கமோ, அல்லது பொலீஸாரோ முயற்சிப்பார்களானால் இந்நாடு பாரிய அழிவை நோக்கிச் செல்வது தவிர்க்க முடியாததாகிவிடும் என்றும் வண. பிதா ரியன்ஸி பெரேரா தெரிவித்தார்.

(ஐ-6)

### 2 மாணவர் உட்பட---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யோரே காயம் அடைந்தவர்கள் ஆவர்.

கெருடாவிலில் விழுந்த ஷெல்களினாலேயே இவர்கள் காயம் அடைந்தனர்.

சிதம்பராக் கல்லூரி மாணவரான திருப்பதி திலீபன் இந்த ஆண்டு ஜி. சீ. ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்ற இருந்தவர் என்று தெரிவிக்கப்படுகிறது. வீட்டில் படித்துக் கொண்டிருந்தபோது இவர் காயம் அடைந்தார்.

காயம் அடைந்த செல்வநாதன் சண்முகவேல் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் கல்வி பயில்கிறார்.

காயம் அடைந்த மூவரும் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(இ- 173-155)

### பேராயருடன்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உட்படுத்தப்பட்டது.

ஆயுதம் தாங்கிய 40 பொலீஸார் இந்த சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

கைதான கெனத்மல்டோன் தேசிய கிறிஸ்தவ மன்றத்தில் நீதிக்கும் சமாதானத்துக்குமான கூட்டவையில் பணி புரிந்துவருகிறார். இதே மன்றத்திலேயே பொலீஸ்மா அதிபர் பிறாங்டி சில்வாவின் மனைவியும் அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோவின் மனைவியும் கடமை ஆற்றுகின்றனர்.

யாழ்ப்பாண நிலைமையை நேரில் அறிவதற்காகவே கெனத் மல்டோன் பேராயர் ஜெபநேசன் அடிகளாருடன் வடக்கு நோக்கி வந்து கொண்டிருந்தார்.

கடந்த ஏழு மாதகாலமாக தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் கீழ் பணியாற்றிவரும் கெனத் மல்டோன் கடந்த மாதமும் யாழ்ப்பாணம் வந்திருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர் கைதானதை அடுத்து கொழும்பில் தேசிய கிறிஸ்தவ மன்றச்செயலகத்தைசோதனையிட்ட பொலீஸார் அங்கிருந்த கெனத் மல்டோனின் கணனியில் — கேலிச் சித்திரம் ஒன்றைக் கண்டு பிடித்தனர் என்று கூறப்படுகிறது.

இரத்தம் வடியும் வெண் தாமரை மலரும் அதன் அடியில் புலிகளுக்கு எதிரான போரில் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவது நிறுத்தப்படவேண்டும் என ஜனாதிபதி சந்திரிகா கூறுவது போன்ற காட்சியும் அந்தக் கேலிச் சித்திரத்தில் வடிவமைக்கப்பட்டிருந்ததாகவும் —

அதனைக் கண்ட பொலீஸார் கெனத் மல்டன் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர் எனத் தீர்மானித்தனர் என்றும் வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

அங்கிலிக்கன் திருச்சபையின் ஆயர் அதி. வண கெனத் பெர்ணாண்டோவைத் தலைவராகக் கொண்ட தேசிய கிறிஸ்தவ மன்றம் ஜூலை 23 ஆம் திகதியான இன்றையதினத்தை சமாதானத்துக்காக வேண்டுதல் செய்யும் நாளாக அனுஷ்டிக்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தது.

(இ-ஐ-4)

### தபால்களை சேர்க்குக

யாழ்ப்பாணம், ஜூலை 23

குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட வெளியூருக்கான தபால்கள் ''ஹபரண'' கப்பல் மூலம் எடுத்துச் செல்லப்படவுள்ளன. எனவே பொது மக்கள் தமது கடிதங்களை நாளை திங்கள் முற்பகல் 10 மணிக்கு முன் யாழ். பிரதம தபாலகத்தில் சேர்க்குமாறு பிரதம தபாலதிபர் திரு. சு. கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

[ஐ]

### ஆசிரிய கலாசாலையை சேர்ந்தவர்களுக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 23

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையைச் சேர்ந்த விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள் அலுவலக ஊழியர்கள் மற்றும் ஏனைய சகல ஊழியர்களையும் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கலாசாலையில் சமுகமளிக்கும்படி கலாசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

(எ)

### தீர்வு யோசனை மாத இறுதியில்

கொழும்பு ஜூலை 23

அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமான அரசாங்கத்தின் உத்தேச திட்டம் இம்மாத இறுதியளவில் அறிவிக்கப்படுமென்று நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை பத்திரிகையாளர்களுக்கு விளக்கிக் கூறுவதற்கென நேற்று நடைபெற்ற கூட்டத்தில் அவர் உரை நிகழ்த்துகையில்—

இந்த திட்டத்தை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்ற வகையில் பத்திரிகைகளில் வெளியான செய்திகள் பொய்யானவை என்று கூறினார்.

### குடாநாட்டைக்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துருப்புக்கள் விலக்கப்பட்டதாக கூறப்படும் வதந்திகளில் எவ்வித உண்மையும் இல்லை.

மாறாக, கைப்பற்றிய இடங்களில் தங்களை ஸ்திரப் படுத்துவதில் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இப்போது நடைபெறும் இராணுவ நடவடிக்கையின்போது யாழ்ப்பாண நகரத்தை கைப்பற்றுவது என்று பேசப்படும் விடயம் சம்பந்தமாக —

நாம் எந்தவித அறிகுறியையும் தெரிவிக்கவில்லை. அத்தகைய நடவடிக்கை ஒன்று நடைபெறும் என்று மக்கள் காத்திருக்கிறார்கள் என்றே நினைக்கிறோம்.

இராணுவத் தாக்குதல் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன; இப்போதும் வகுக்கப்படுகின்றன என்பதனை இங்கு கூற வேண்டும்.

இந்த நடவடிக்கையின் போது பொது மக்களுக்கு ஏற்படும் மரணங்கள் மற்றும் காயமுறுதலைத் தவிர்ப்பதற்கான சகல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பது மிகப் பிரதானமாகும்.

எனவே இந்தத் தாக்குதலை நடத்தி முடிக்க நிறையக் காலம் தேவை இரண்டு மூன்று நாட்களிலோ அல்லது நான்கு ஐந்து நாட்களிலோ யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதையும் அல்லது வடமாகாணத்தை கைப்பற்ற முடியும் என்றும் நம்புவது தவறாகும். நீண்ட நாட்கள் செல்லும். நிறையப் போராடவும் நேரிடும்.

விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து யாழ்ப்பாணக் குடாநாட்டை விடுவிப்பதற்குத் தேவையான பலமும், துணிவும் எமது படைகளுக்கு உண்டு— என்று சொன்னார்,

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தனலட்சுமி மார்க்கண்டு

காரைநகர் ஆயிலி கந்தசாமி கோவிலடியை பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த தனலட்சுமி மார்க்கண்டு நேற்று (சனிக்கிழமை) பி. ப. 8 மணிக்கு சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு மார்க்கண்டுவின் அன்பு மனைவியும், சிவமலர், சிவயோகம், சிவபாக்கியம் ஆகியோரின் அன்புத் தாயாரும், கணேசலிங்கம், மகேந்திரராசா, பத்மநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், நமசிவாயம், பாக்கியம், குலசிங்கம், சரஸ்வதி கனகசபாபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தேவராசா, அருள்ராசா, சேந்தன், ஜெயந்தி, சிவருக்சி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கணேசலிங்கம் இல்லத்தில் (சங்கரத்தைசந்தி) இன்று ஞாயிறு (23-07-95) காலை 8 மணியளவில் நடைபெற்று வழுக்கையாறு மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
கு. குலசிங்கம்
[சகோதரர்]

[37675]

## திருமதி இராசம்மா கார்த்திகேசு

அரியாலையை சேர்ந்த திருமதி இராசம்மா கார்த்திகேசு நேற்றுக் காலை சிவபதமடைந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற நமசிவாயம் கார்த்திகேசு [தபால் திணைக்கள உத்தியோகத்தர்] அவர்களின் அன்பு மனைவியும், மகேஸ்வரி, குணரட்ணம் [விவசாயத் திணைக்களம் – திருமலை], ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், பொன்னுத்துரை [ஓய்வு பெற்ற கூட்டுறவுப் பரிசோதகர்], நடராசா [ஓய்வு பெற்ற விவசாய உத்தியோகஸ்தர்], கருணேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல - 151, திருமகள் வீதி, அரியாலை இல்லத்தில் இன்று [23-7-95] காலை 9 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சித்துபாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
பொ. சாந்தகுமார்
(பேரன்)

[37677]

## திருமதி பவளம் ஐயாத்துரை

சங்கானையில் வசித்த திருமதி பவளம் ஐயாத்துரை 11 - 07 - 95 செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. செல்லையா ஐயாத்துரையின் அன்பு மனைவியும், செல்வி ஐ. தவமணி, திருமதி ஆ. புஷ்பலீலா, திருமதி செ. இராசேஸ்வரி, ஐ. லோகேஸ்வரன் (U. K.), திருமதி ப. இராகினி, திருமதி இ. மாலினி (கண்டி), ஐ. வாமதேவன் (U.K.) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஞா. ஆனந்த ஈஸ்வரன், ம. செல்வநாயகம், திருமதி லோ. ரஜனி (U.K.), பொ. பத்மராஜா (யாழ். மாநகரசபை), இ. இராதாகிருஷ்ணன் (கண்டி), திருமதி. வா. கல்யாணி (U K) ஆகியோரின் மாமியாரும், கவிதா, ஜனார்த்தனன், தனுஷா, சதுஸ்ரதி, வினிபா, சிந்துஜா, தனுபா, பிரேமிளா [U. K] ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற சி. நாகேஸ்வரி, திருமதி இ. ராஜமணி, காலஞ்சென்ற சி மார்க்கண்டு, திருமதி க. அன்னம்மா, சி. மகேந்திரன், திருமதி கெ. மகேஸ்வரி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 11 - 07 - 95 செவ்வாய்க்கிழமை நல்லூர் செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
பொ. பத்மராஜா
(மருமகன்)

பிரதானவீதி,
சங்கானை.

[37667]

## நல்லதம்பி சற்குணநாதன்
[பொலிஸ் உத்தியோகஸ்தர்]

நல்லதம்பி சற்குணநாதன் 20-07-95 அன்று அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி ருக்மணிதேவி தம்பதிகளின் அன்பு மகனும், ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த காலஞ்சென்ற அருளானந்தம் இரஞ்சிதரமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், சுந்தரேஸ்வரியின் (சுசிலா) அன்புக்கணவரும், சுகன்யா, சுமித்திரா, ராஜீவ், நிரோசன், ஆகியோரின் அன்புத்தந்தையும், திருமதிகள் தவமணிதேவி மகாலிங்கம், செல்வமலர் சந்திரதாஸ், சித்திராதேவி தங்கராஜா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 24-07-95 அன்று கொழும்பில் நடைபெறும்.

தகவல் :
மனைவி (சுசிலா)

"கனகவில்லா"
மண்டாக்குளம் ஒழுங்கை,
இருபாலை கிழக்கு,
கோப்பாய்.

(37676)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 23 - 07 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## வீடு பார்க்க சென்ற 6 பேர் சிக்கினர்

யாழ்ப்பாணம், ஜூலை 23

அளவெட்டிப் பகுதிக்கு தமது வீட்டைப் பார்த்து வரச் சென்றவர்களில் ஆறு பேர் இராணுவத்தினரின் பிடிக்குள் சிக்கிக் கொண்டனர்.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் பிடிபட்டவர்களில் அளவெட்டியைச் சேர்ந்த அப்புத்துரை பாலச்சந்திரன் [வயது 32], கோபால் கிருஷ்ணகுமார் (வயது 26], கந்தவனம் கணேசலிங்கம் (வயது 35) ஆகிய மூவரின் பெயர் விவரங்கள் தெரியவந்துள்ளன.

(இ-15)

## பாடசாலைகள் நாளை முதல் இயங்கும்

யாழ்ப்பாணம். ஜூலை 23

இராணுவ நடவடிக்கை காரணமாக தற்காலிகமாக மூடப்பட்ட யாழ். மாவட்டப் பாடசாலைகள் அனைத்தும் நாளை திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பமாகின்றன.

இதற்கு வேண்டிய ஒழுங்குகளைக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களும், அதிபர்களும் செய்துள்ளனர்.

நாளை தொடக்கம் இரண்டாம் தவணைப் பரீட்சைகளை நடத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகளை அதிபர்கள் மேற்கொள்வார்கள் என்றும் —

பாடசாலைகளை ஆரம்பித்து நடத்துவதற்கு வேண்டிய ஒத்துழைப்பினை வழங்குமாறும் சகல தரப்பினரையும் கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

[இ-4]

### மரண அறிவித்தல்

## இராசரெத்தினம் ஆனந்தராஜா
(பிரதேசசபை உபஅலுவலகம் ஊர்காவற்றுறை)

நாரந்தனை கிழக்கை பிறப்பிடமாகவும், சங்கரத்தை வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரெத்தினம் ஆனந்தராஜா 10-07-95 அன்று அகால மரணமானார்.

இவர் சசியின் அன்புக் கணவரும், இராசரெத்தினம் — கமலாதேவி தம்பதிகளின் அன்புப் புதல்வனும், குகனேசபிள்ளை — காலஞ்சென்ற நாகலெட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், சிறிஸ்கந்தராஜா [கிராம சேவையாளர் பருத்தியடைப்பு] சற்குணராஜா (சோதி புடைவையகம்]. விக்னராஜா [இளங்கையன் பதிப்பகம்), வனஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும், புலவன் [ஜேர்மனி), நிமலன் [ஜேர்மனி], வாணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 10-07-95 அன்று கொக்குவில் இந்து மயானத்தில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல் :
த. இராசரெத்தினம்
[தந்தை]

"மிதிலை"
கப்டன் விநோத் வீதி,
ஆனைக்கோட்டை.

(37683)

மேலும் மரண அறிவித்தல்கள் 2 ஆம் பக்கத்தில்

வெகுவிரைவில் எதிர்பாருங்கள்!

மட்டு. அம்பாறை சிறப்புப் படையணியும், நிதர்சனமும் இணைந்து வழங்கும்

சி. சேரனின்

உறங்காத கண்மணிகள்
(முழுநீள திரைப்படம்)

திரைப்பட வெளியீட்டுப் பிரிவு,
நிதர்சனம், தமிழீழம்.

[சி-1917]

# மரண அறிவித்தல்கள்

## வைத்திலிங்கம் பரமசுந்தரம்

சரவணையைப் பிறப்பிடமாகவும், சுண்டிக்குளியை வதிவிடமாகவும் கொண்டிருந்த வைத்திலிங்கம் பரமசுந்தரம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - சிதேவிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற தாட்சாயினியம்மாவின் அன்புக் கணவரும், சொர்ணகாந்தன் (கொழும்பு), பரமானந்தன் (லண்டன்), வாசுதேவன் (லண்டன்), பஞ்சலிங்கம் யசோதரன் (லண்டன்), ஷகிலா (லண்டன்], ஐங்கரன், ஜெகந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான த. காமாட்சியம்மா, ம. விநாயகமூர்த்தி, கைலாயபிள்ளை, மற்றும் முத்துக்குமாரு ஆகியோரின் அன்புச் சகோதரரும், வேலாயுதபிள்ளை, மனோன்மணி, காலஞ்சென்ற லெட்சுமி, மற்றும் அருமைநாயகம், காலஞ்சென்ற தியாகராஜா, மற்றும் நாகநாதபிள்ளை அம்பிகாபதி, தவராசா விசாலாட்சி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சொ. சாந்தினி ப. மங்கையற்செல்வி ஆகியோரின் அன்பு மாமனாரும், சஜினி, துளசிகன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-7-95] ஞாயிற்றுக்கிழமை பி. ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
வி. தற்பராமூர்த்தி
(பெறாமகன்)

22/4A, விதானையார் ஒழுங்கை,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

[37674]

## திருமதி சுப்புலட்சுமி ஜெகநாதன்

திருமதி சுப்புலட்சுமி ஜெகநாதன் [20-7-95] வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் ஜெகநாதனின் அன்பு மனைவியும், மாணிக்கவாசகர், நாகேஸ்வரி, சாந்தினி, மோகன், [B.COM ஆசிரியர், குருணாகல் முஸ்லிம் மகாவித்தியாலயம்] மனோகரி [கொழும்பு], மகேஸ்வரன், பாஸ்கரன் ஆகியோரின் அருமைத்தாயாரும், காலஞ்சென்ற தங்கவேல் மற்றும், கணேஸ் [கொழும்பு], ராமகிருஸ்ணன், தீனபந்து, ராஜராஜேஸ்வரி, ஆகியோரின் அருமை மாமியாரும், புவனேஸ்வரி, காலஞ்சென்ற விஜயலட்சுமி, மற்றும் யோகினி (கொழும்பு) ஆகியோரின் சிறிய தாயாரும், சுதாகரன், கீதா, லக்சுமி, துஷ்யந்தி, விவேக், சாருஜன், நிருஜன், அனுசா, இந்துமதி, சுகன்யா, ரிஷ்யந்தன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மகளிர் விடுதிக்கு முன்பாக அமைந்துள்ள இல 54/2, இராமநாதன் வீதி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல் :
ஜெகநாதன்
[கணவர்]

(37680)

## முத்துக்குமாரு இரத்தினம்

சரவணை, வண்ணான்புலத்தைப் பிறப்பிடமாகவும், 1215/3, கே. கே. எஸ். வீதி, பூனாறி மரத்தடி, யாழ்ப்பாணத்தில் வசித்தவருமாகிய முத்துக்குமாரு இரத்தினம் நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளை, மற்றும் கமலாதேவியின் அன்புக் கணவரும், சிவநாதன், மகாநாதன், மகாலெட்சுமி, கோமதி ஆகியோரின் அன்புத் தந்தையும், சர்வானந்தனின் அன்பு மாமனும், பிரசாந்தனின் பேரனும், காலஞ்சென்ற கார்த்திகேசு, மற்றும் மாணிக்கம், சண்முகம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் இன்று [23-7-95] பிற்பகல் 2 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
இ. சிவநாதன்
(மகன்)

[37681]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org